*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIFImpact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12022026.22

# Devotional Literature Praises Parangusan

**Dr K. Kumarakurubaran***,
Assistant Professor, Department of Tamil,
Mannar Thirumalai Naicker College, Madurai – 625004, Tamil Nadu, India,
**ORCiD:** https://orcid.org/0000-0003-1949-6168
*Corresponding Author Email: gurusaru86@gmail.com, Tel: 9047342591

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 01-July-2026

## ABSTRACT

Devotional literature is one of the most important elements of ancient Indian philosophical tradition. Within it, two major branches existed: Shaivism and Vaishnavism. Among the Vaishnavites, the revered figure was Nammalvar. His depth of devotion is clearly evident in other literary works. During his lifetime, he stood as a counterforce to other religions. At a time when other religions held dominant styles, he restrained them like a mahout controlling an elephant with a goad. Using the intensity of his devotion to Vishnu as a foundation, he paved the way for the growth of Vaishnavism.

***KEYWORDS:*** *Holy Shrine, Traditional Knowledge, Devarayanpettai, Machapureeswarar, Chola Architecture, Tevara Vaipputhalam, Heritage Conservation.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Tamilmanam

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

# பக்தி இலக்கியம் போற்றும் பராங்குசன்

***முனைவர் க.குமரகுருபரன்,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,
பசுமலை, மதுரை – 625 004, தமிழ்நாடு, இந்தியா, தொலைபேசி: 9047342591.

**ஆய்வுச்சுருக்கம்**

பக்தி இலக்கியம் பண்டைய இந்திய தத்துவ மரபின் மிக முக்கிய கூறுகளில் ஒன்று. இவற்றில் சைவம், வைணம் என்ற இரு பெரும் பிரிவு நிலவியது. வைணவர்களால் போற்றப்பட்டவர் நம்மாழ்வார். இவரின் பக்தியின் திறம், இவரது படைப்புகளில் வெளிப்படையாக தெரியும். தான் வாழ்ந்த காலத்தில் பிற சமயங்களுக்கு அங்குசமாக திகழ்ந்தார். பிற சமயங்கள் பெரிய யானையாக நிலவிய காலத்தில் யானையை கட்டுப்படுத்த பாகன் கையில் உள்ள அங்கும் போல பிற சமயங்கங்களைக் கட்டுப்படுத்தினார். விஷ்ணு மீது கொண்ட பக்தியின் திறத்தினை முன் வைத்து, வைணவ சமயம் மேம்பட வழிவகை செய்தவர்.

**முன்னுரை**

பண்டைய இந்திய தத்துவ மரபில் வேதங்கள் நீக்க முடியாத இடத்தினை இன்றளவும் பெற்றுள்ளன. வேதங்களில் இறுதியாக உபநிடதங்கள் அமைகின்றன. இதனை வேதாந்தம் என்று அழைப்பர். சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட இவை யோகம், தத்துவம் பற்றி குரு சீடன் இடையே நடைபெறும் உரையாடலாக அமைந்துள்ளன. உபநிடங்கள் 108 என்பர். உபநிடதங்களில் சொல்லப்படுபவனவற்றை ஒருங்கமைத்து சுருக்கி கூறுவது பிரம்ம சூத்திரமாகும். சங்கரர், ராமானுஜர், மத்வர், ஸ்ரீ கண்டர் போன்றோர் அரிய விளக்கங்களை உபநிடநங்களுக்கு வழங்கியுள்ளனர். ராமானுஜர் பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீ பாஷ்யம் என்ற ஓர் உரையை தந்து அருளியுள்ளார். வைணவ உபநிடதங்கள் 13 ஆகும். ராமானுஜரை பின்பற்றியவர்கள் வைணவர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர் பரப்பிய வைணவ தத்துவத்தின் ஆதி பரம்பொருள் திருமால் ஆவார்.

திருமால் உபநிடதத்தில் பிரம்மம் என்று அழைக்கப்படுகிறார். திருமால் குன்றேறி தாண்டியவன். அறம், ஞானம், சக்தி, அன்பு யாவும் அவனிடம் நிலைப்பெற்றுள்ளன. எப்பொழுது வேண்டுமானாலும் வேண்டிய அவதாரம் எடுத்து உயிர்களின் இடரை போக்குபவன். “பிரம்மமும் ஜீவனும் உயிரும் உடம்பும் போல உள்ளவை. ஜீவன்கள் மற்றும் பிரபஞ்சம் இவை பிரம்மத்தின் உடலாகும். இதனை பிராமணம் உபநிடதம் குறிப்பிடுகிறது. எவன் அறிவுக்குள் உறைபவனோ, அறிவுக்குள் அறிவாக இருப்பவனோ, எவனை அறிவும் அறிய முடியாதோ, எவனுக்கு அறம் உண்டோ, எவன் அறிவையும் உள்ளிருந்து ஆட்டி வைப்பானோ, அவன் இவ்ஆன்மா அழியாமல் உள் உறைபவன்”. பிரம்மம் இரண்டற்றது, பகுப்புகளுக்கு உள்ளிட்ட வேற்றுமை கிடையாது. ராமானுஜரின் இக்கோட்பாட்டிற்கு வசிஷ்டாத்வைதம் என்று பெயர். வசிஷ்டம் என்றால்

சிறப்பான பொருள் என்று அர்த்தம்.

வைணவ சமயம் மிக ஆழங்கால் பட்ட சமயமாக உருபெற காரணமாக அமைந்தவர்கள் ஆழ்வார்கள் ஆவர். பகவானின் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுகின்றவர்கள் ஆழ்வார்கள் எனப்படுவர். வைணவ நெறியை பின்பற்றி பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்கள் எனப்பட்டனர். அவர்களில் முதன்மையானவர் நம்மாழ்வார் ஆவார். நம்மாழ்வாருக்கு வழங்கப்படும் பல்வேறு பெயர்களில் பராங்குசன் என்பதும் ஒன்று. அங்குசம் என்றால் யானை என்ற காட்டு விலங்கினை கட்டுப்படுத்தி தன் வசப்படுத்த மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கருவியாகும். மனிதனை விட வலிமையான விலங்கு, உருவத்தில் பெரிது அதனை கட்டுப்படுத்துவதற்கு அங்குசம் என்ற கருவியை பயன்படுத்தினார். யானையின் மிகப்பெரிய உடலில் நரம்புகளைக் கட்டுப்படுத்துவதன் வழி தன் கட்டளைக்கு இணங்க வைத்தான். யானையின் நரம்பு மண்டலத்தை கட்டுப்படுத்துவது அல்லது செயல்பட தூண்டுவது பாகன் கையில் உள்ளதை அங்குசம் என்பர்.

**நம்மாழ்வார் பிறப்பு**

நம்மாழ்வார் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆழ்வார் திருநகரியில் அவதரித்தார். காரியார் உடைய நங்கை இருவரின் மகனாகப் பிறந்தார். நான்கு வேதங்களின் உண்மை பொருளை தந்தமிழால் பாடியதால் வேதம் தமிழ் செய்த மாறன் என்று புகழப்படுகிறார். "கம்பன் வீட்டு கட்டுத்தறியும் கவி பாடும்" என்ற புகழுக்குரிய கம்பன் பாடிய சடகோபர் அந்தாதி என்ற நூலின் தலைவன் இவரே ஆவார். சடம் என்பது ஆழ்வார் அவதரிக்கும் பொழுது ஆத்ம ஞானத்தை உணர்வதற்கு தடையாக இருந்த சடம் என்ற காற்றை கோபித்ததால் சடகோவர் என்ற சிறப்பு பெயரை பெற்றார். சிலர் பிறந்தது முதல் பால் உண்ணாமல் அழாமல் ஒரு சடம் போல் இருந்ததால் சடகோபர் என்பர். நம்மாழ்வார் ஒரு புளிய மரத்தின் அடியில் எவ்வித சலனம் இன்றி 16 ஆண்டுகள் தவம் இருந்தார். வேதங்களின் உண்மை பொருள் என திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி ஆகிய நான்கு நூல்களை இயற்றிய அருளினார்.

**நம்மாழ்வாரின் சிறப்பு பெயர்கள்**

நம்மாழ்வார் பராங்குசன் என்ற ஒரு சிறப்பு பெயர் பெற்றவர் அல்ல. ஆழ்வார்களின் முதன்மையானவர் என்று சிறப்பித்து குறிப்பிடும் அளவிற்கு சிறப்பு வாய்த்தவர். இவருக்கு 35 சிறப்பு பெயர்கள் உள்ளன. அவைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | சடகோபன் | 18 | தொண்டர் பிரான் |
| 2 | மாறன் | 19 | நாவீரர் |
| 3 | காரிமாறன் | 20 | திருநாவீறு உடையபிரான் |
| 4 | பராங்குசன் | 21 | உதய பாஸ்கரர் |
| 5 | வேதம் தமிழ் செய்த மாறன் | 22 | வகுள பூஷண பாஸ்கரர் |
| 6 | வகுளாபரணன் | 23 | ஞானத் தமிழுக்கு அரசு |

CC BY ,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

| | | | |
|---|---|---|---|
| 7 | குருகைப்பிரான் | 24 | ஞானத் தமிழ் கடல் |
| 8 | குருகூர் நம்பி | 25 | மெய் ஞானக் கவி |
| 9 | திருவாய்மொழி பெருமாள் | 26 | தெய்வ ஞானக் கவி |
| 10 | பெருநல்துறைவன் | 27 | தெய்வ ஞான செம்மல் |
| 11 | குமரி துறைவன் | 28 | நாவலர் பெருமாள் |
| 12 | பவரோக பண்டிதன் | 29 | பாவலர் தம்பிரான் |
| 13 | முனி வேந்து | 30 | வினவாது உணர்ந்த விரகர் |
| 14 | பரப்ரம்ம யோகி | 31 | தொண்டர் பிரான் |
| 15 | நாவலன் பெருமாள் | 32 | நாவீரர் |
| 16 | ஞான தேசிகன் | 33 | திருநாவீறு உடையபிரான் |
| 17 | ஞான பிரான் | | |

என்ற பெயர்களைப் பட்டியலிடும் பொழுது நம்மாழ்வாரின் சிறப்பு வெளிப்படையாக தெரிகின்றது. வள்ளுவரின் சிறப்பு பெயர்களின் பட்டியல் மட்டுமே நீண்டதாக அமையும். நம்மாழ்வாரின் பெயர் பட்டியல் அத்தன்மையில் மிக நீண்டதாக அமைகின்றது. நம்மாழ்வாரின் ஒவ்வொரு பெயருக்கும் சிறப்பு தன்மை பொருந்திய பல கதைகள் உண்டு.

**பாராங்குசன்**

நம்மாழ்வார் பராங்குசன் என்ற சிறப்பு பெயர் பெற காரணம் என்ன? வைணவ சமயம் பிற சமயங்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ காரணமாக அமைந்தவர் நம்மாழ்வார். பெரிய யானை போன்று விளங்கிய பிற சமயங்களுக்கு அங்குசமாக செயல்பட்டதால் பராங்குசன் என்ற பெயரைப் பெற்றார் என்பர். சிலர் பெருமாளை தன் நா வன்மையால் பாடல் இயற்றும் திறத்தினால் கட்டுப்படுத்தும் வல்லமை பொருந்தியவர். திருமாலே இவர் பாடலைக் கேட்டவுடன் கட்டுண்டு போவான். மாகாபாரத போரில் பஞ்சபாண்டவர்களில் சகாதேவன் கிருஷ்ணனை தம் பக்தியால் கட்டிவிடுவார் என்பதை அனைவரும் அறிவர். கிருஷ்ணன் சிறு குழந்தையாக இருக்கும் போது யசோதையம்மாள் உரலுடன் கயிறு கொண்டு கட்டிவிடுவார். கிருஷ்ணரை முதலில் எவ்வளவு கயிறுகளை ஒன்றாக இணைத்தும் கட்ட முடியவில்லை. பின்பு அவரே கட்டுங்கள் என்று கூறிய பின்பு கட்டிவிடுகிறார். பரசமயங்களாகிய யானைகளை அடக்கும் அங்குசம் போன்றவர் என்றும் திருமாலகிய யானையை தன் சொல் வளத்தால் அடக்கி தம் வயப்படுத்திக் கொண்ட நாவியர் உடையவர் என்றும் குறிப்பிடுவர். பரம்பொருளாகிய பெருமானை கட்டுப்படுத்த வல்ல நா வன்மையைப் பெற்றதால் பராங்குசன் என்ற சிறப்பு பெயரை பெற்றதாக பெருந்தகைமையாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஆழ்வார்கள் பெருமாளை வழிபடும் பொழுது நாயகன் நாயகி பாவத்திலே பாடுவது மரபாக இருந்தது. நம்மாழ்வார் பெருமாளை நாயகன் நாயகி பாவத்திலேயே பாடியதால் பராங்குசன் என்ற பெயர் பராங்குச நாயகி என்று வழங்கப்பட்டது.

**வைணவ சமய தத்துவங்கள்**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

வைணவ சமய தத்துவம் மூன்று ஆகும். சித்து, அசித்து, ஈஸ்வரன் என்று குறிப்பிடுவர். சித்து என்பது உயிர், அசித்து என்பது மக்கள், விலங்கு முதல் மனிதன் வரை முதலிய உலகப் பொருட்கள் எல்லாவற்றிற்கும் காரணமான மூலப்பகுதி ஈஸ்வரன் இறைவன். இவை மூன்றும் தனித்தனி இயல்புடைய வேறு வேறு பொருட்கள், அறிவில்லாதவை. இறைவன் சித்து அசித்து இரண்டின் உள்ளும் நீக்குமார நிறைந்து காணப்படுபவன். மூலப் பகுதி விரிவடைந்து மக்கள் விலங்கு முதலியவற்றின் உடம்புகளும் மற்றும் உள்ள பொருட்களுமாய் விரிவடைகின்றது. உயிர் தன்னுடைய புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு உடம்பை அடைகின்றது. பிறப்பின் ரகசியம் இதுவே என்பர். இறைவன் மூலப் பகுதியில் வித்தாக மாறி எல்லா உயிர்களுக்குள்ளும் எல்லா பொருள்களுக்குள்ளும் மறைந்துள்ளான். இம்மூன்று தத்துவங்களும் ஒன்றை விட்டு ஒன்று புரியாமல் எக்காலத்தும் தத்தம் இயல்பை விடாமல் ஒன்று சேர்ந்துள்ளன. மாகபாரத போரில் அர்ச்சுணன் போரில் சண்டை இடமாட்டேன் என்று காண்டீபத்தை கீழே தாழ்த்த காரணம் கேட்கிறார் கிருஷ்ணன். அர்ச்சுணன் போரில் பலரை நான் கொள்ளவேண்டும். என் உற்றார் உறவினரை நான் கொள்வதா? என்று உரைக்க. கிருஷ்ணன் கொள்வனும் நானே இறப்பவனும் நானே உலகில் உள்ள அனைத்தும் எனது உருவங்களே என்று பதில் உரைக்கிறார். வைணவ சமய தத்துவத்தின் ஒட்டுமொத்த உருவம் நம்மாழ்வார்.

**நம்மாழ்வார் மதுரகவி ஆழ்வார் சந்திப்பு**

பன்னிரு ஆழ்வார்களில் எவருக்கும் அமையாத சிறப்பு நம்மாழ்வார் அமைந்தது. மதுரகவி என்ற ஆழ்வார் திருக்கோளூர் எனும் ஊரில் அவதரித்தார். நான் வரை முற்றும் தமிழ் நூல்களை ஓதி உணர்ந்தவர். அயோத்தி மாநகரம் சென்று இறைவனை வணங்கி கங்கை கரையில் தங்கி இருந்தார். அவர் தெற்கு ஒரு ஒளியை கண்டார். அவ்வொலியைக் காண பல நாட்கள் நடந்து பயணம் செய்து திருக்குருகூர் வந்தடைந்தார். ஒளியை பின் தொடர்ந்து வந்த அவர் திருகுருகூர் வந்தடைந்த உடன் அவ்வொலி மறைந்து போனது. இரவில் தோன்றும் ஒளி காணவில்லை. பின்பு திருப்புளிய மரத்தின் அடியில் பல ஆண்டுகளாக தவம் இருந்த நம்மாழ்வாரை கண்டார். அவரின் நிலையை அறிய ஒரு கல்லை அவர் முன் நெறிந்து சத்தத்தை உண்டாக்கினார். நம்மாழ்வார் கண்விழித்துப் பார்த்தார். நம்மாழ்வாரிடம்

**செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால்**
**எத்தை தின்று எங்கே கிடைக்கும்?**

என்று வினவினார். நம்மாழ்வார்

**அத்தை தின்று அங்கே கிடக்கும்**
**என்று பதிலளித்தார்.**

(மு அருணாசலம் - தமிழ் இலக்கிய வரலாறு - ஒன்பதாம் நூற்றாண்டு, பாகம் – 2,2005, ப.9.) செத்தது என்பது உடல் சிறியது என்பது உயிர் பிரித்தல் உயிர் தன் வினைகளுக்கு ஏற்ப உடம்பை அடைதல். மதுரகவியாழ்வார் கேட்ட கேள்வியின் பொருண்மை உயிர் உடம்பை அடைந்தால், எதனை அனுபவித்து எங்கே இருக்கும் என்பதாகும். அதற்கு நம்மாழ்வார் தந்த பதில். உடம்பை அடைந்த உயிர் தன் வினைப்பயனை அனுபவித்துக் கொண்டு அவ் உடம்பிலேயே இருக்கும் என்று

விடையளித்தார். உயிர் அப்பிறப்பிற்குரிய வினை முடியும் வரை அவ்வுடம்பில் இருக்கும் என்பது இதன் பொருளாகும். சித்து எனும் உயிர் அசித்து எனும் உடம்பில் சென்று வினை முடியும் வரை தங்கும் என்பது வைணவ தத்துவமாகும்.

அன்றிலிருந்து நம்மாழ்வாரை தன் வழிபடு தெய்வமாக ஏற்றுக் கொண்டு செயல்படத் தொடங்கினார் மதுரகவியாழ்வார். பன்னிரு ஆழ்வார்கள் எவருக்கும் கிடைக்காத சிறப்பு நம்மாழ்வார் கிடைத்தது என்றால் தன்னை இறைவனாக வழிபடக்கூடிய அடியவர் ஒருவர் கிடைத்தார். இதேபோன்று சைவ சமயத்திலும் திருநாவுக்கரசர் இறைவனாக வழிபடக்கூடிய அடியவர் ஒருவர் அமையப்பெற்றார். யார் அவர் தெரியுமா? அப்பூதி அடிகளார். திருநாவுக்கரசர் பெயராலே திங்களூரில் பல்வேறு அறச்செயலைப் புரிந்து வருகிறார். நாவுக்கரசரை காணாமல் அவரையே இறைவனாக வழிபட்டவர் அப்பூதி அடிகளார். நம்மாழ்வாரை மட்டுமே தன்இறைவனாக கொண்ட மதுரகவியாழ்வார். பார் போற்றும் பாக்களை தான் இறைவனாக ஏற்றுக் கொண்ட நம்மாழ்வார் மீது பாடுகிறார். கண்ணிநுண்சிறுத்தாம்பு, வைணவ சமயத்தில் நம்மாழ்வாரைப் போற்றி மதுரகவியாழ்வாரால் இயற்றப்பட்ட நூலாகும். இந்நூல் 11 தனியன்களைக் கொண்டது. மதுரகவியாழ்வாரால் நம்மாழ்வாரை வணங்கிப் பாடப்பட்ட இந்நூல் நாலாயிர திவ்யபிரபந்தம் தொகுப்பில் முதாலாயிரம் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

**நம்மாழ்வார் படைப்புகள்**

நம்மாழ்வார் இயற்றிய பாசுர நூல்கள் நான்கு: திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி திருவாய்மொழி. இவை ரிக், யசுர், அதர்வண மற்றும் சாம வேதத்தின் சாரமாக அமைந்திருப்பதாகப் பெரியோர்கள் சொல்வார்கள். இந்தத் திருவாய்மொழியில் 1102 பாசுரங்களும், திருவிருத்தத்தில் 100 பாசுரங்களும், திருவாசிரியத்தில் 8 பாசுரங்களும் பெரிய திருவந்தாதியில் 87 பாசுரங்களும் என நான்கு பிரபந்தங்களில் ஆயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றாறு பாசுரங்களை பாடியுள்ளார்.

திருமாலுக்குரிய திவ்விய தேசங்களில் 37 திவ்விய தேசங்களுக்கு மங்களாசாசனம் செய்துள்ளார். அயோத்தியில் இருந்த மதுரகவி ஆழ்வார் தெற்கே வந்து நம்மாழ்வாரை வணங்கி அவருக்கு சேவை செய்து வந்தார். நம்மாழ்வார் பெருமானின் குணங்களைச் சொல்ல, சொல்ல மதுர கவியாழ்வார் எழுதுவார். குரு சீடர் பரம்பரையை இப்பொருள் விளக்கும் வகையில் உள்ளது. நம்மாழ்வார் அனுபவித்து சொல்லும் பொழுது மயக்கம் அடைந்து விடுவார். அப்பொழுதெல்லாம் மதுரகவியாழ்வார் தான் இவரை மயக்கம் தெளிவிப்பார். நம்மாழ்வார் மக்களுக்கு தொண்டு செய்வதற்காகவே இவ்வுலக வாழ்க்கையை வேண்டினார். இப்பொழுதும் ஆழ்வார் திருநகரியில் இவர் தவம் செய்த புனித புளியமரம் உள்ளது. பெருமாளின் 108 திருப்பதிகளில் நம்மாழ்வார் தனியாக சென்று 16 கோயில்களையும், பிற ஆழ்வார்களுடன் சேர்ந்து 19 கோயில்களையும் என மொத்தம் 35 கோயில்களை மங்களாசாசனம் செய்துள்ளார்.

**"வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியல்லேன்" (**தி.வா, பா.319.**)**

**என்று மானிடம் பாட வந்த கவியல்ல நான் எம் பரம்பெருளாகிய திருமாலை மட்டுமே பாடி**

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

**துதிப்பேன் என்று உரைக்கிறார். நம்மாழ்வார் பாடல்**

> **"ஆடிஆடி அகம் கரைந்து, இசை**
> **பாடிப் பாடிக் கண்ணீர் மல்கி**
> **நாடி நாடி நரசிங்கா! என்று**
> **வாடி வாடும் இவ்வாள் நுதலே"** (நா.தி.பி,பா.2394.)

**என்ற பாடல் வரிகளில் உடல் உயிர் அனைத்தும் திருமாலே அவனை ஆடி பாடி கரைந்து கண்ணீர் மல்கி பாடுவதே யான் பெற்ற பேறு என்று குறிப்பிடுகிறார். எனக்கு வாய் என்ற ஒன்று உண்டு அது பெருமானை பாடுதலையே தொழிலாக கொண்டது. வாயின் தொழில் என்ன? என்று வினவியர்கள் உண்பதே தொழில் என்பர். நம்மாழ்வார் மாற்றி திருமால் நாமத்தினை உச்சரிப்பதே தொழில் என்பர். நாயகி பாவத்தில் நயம்பட பாடுகிறார். தலைவனை காணாத தலைவியின் நுதல் வாடி வாடும் தன்மையை பெறுகிதே அதுபோல**

> **"உண்ணும் சோறும் பருகும் நீரும்**
> **தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்"** (தி.வா, பா.671)

**அவனை பாடுதல் அல்லாத தொழிலை என் வாய் செய்யுமானால், அது உண்ணும் சோறு, பருகும் நீரு தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் அன்றோ? என்று பாடுகிறார்.** இறைவன், உயிர் என்னும் இரண்டின் இயல்புகள், எம்பெருமானை அடையும் வழி, இடையில் தோன்றும் இன்னல், அதனை நீங்கி இறைவனை அடைதல் என்னும் நிலைகளில் நம்மாழ்வார் நூல்களின் பாசுரங்கள் அமைகின்றன. நம்மாழ்வாரின் மேற்குறிப்பிட்ட பாசுரங்களில் உண்ணதமான நுட்பத்தினை அறியமுடியும். மனிதன் என்பவன் உணவு, நீர் என்ற அடிப்படை தேவைகளை உட்கொள்ளாமல் நெடுநாள் வாழ்வது என்பது சாத்தியமற்ற ஒன்று. அவற்றின் தன்மையை தெய்வத்துடன் ஒருங்கிணைத்து விடுவது என்பதே சிறப்பானது என்பதை உணர்ந்துள்ளார். உணவில் இறைவனைக் கண்டு மனிதன் அனைத்திலும் இறைவனைக் காணும் உண்ணத நிலையை உலகிற்கு உணர்த்துகிறார்.

### திருவாய் மொழி

நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாக, திருவாய்மொழி உள்ளது. இதில் 1102 பாசுரங்கள் உள்ளன. இப்பாசுரங்கள் யாவும் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. இதனை ஓதுவார்க்கு மறவாமல் நினைவில் வைத்து ஓதுவது எளிது. நம்மாழ்வாரை உடலாகவும், மற்ற ஆழ்வார்களை உடலின் உறுப்புகளாகவும் வைணவர்கள் கருதுவர். பக்தி உணர்வின் இருப்பிடமாகத் திருவாய்மொழி உள்ளது. வைணவ அறிஞர்கள் பலர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளனர். அந்த உரைகள் வியாக்கியானங்கள் எனப்படுகின்றன. இவை எழுத்து எண்ணிக் காக்கப்பட்டு வருகின்றன. மூவாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, முப்பதாறாயிரப்படி என்று எழுத்துகளின் எண்ணிக்கையே திருவாய்மொழி உரைநூல்களுக்குப் பெயராக அமைந்துள்ளது. வைணவர்கள் தம் வாழ்வின் இன்பத்திலும்,

துன்பத்திலும் மறவாமல் போற்றும் பாடல்கள் திருவாய்மொழிப் பாடல்கள் ஆகும். தென்கலை வைணவர்களுக்கு திருவாய்மொழி மந்திரங்களை விட உயர்வாக உள்ளன.

நம்மாழ்வாரின் பாடல்களில் தத்துவ ஞானப் பாடல்கள் உள்ளன. காதல் துறைகள் அமையப்பட்ட பக்திப் பாடல்கள் உள்ளன. பழைய இலக்கியத் தொடர்கள் திருவாய்மொழியில் எடுத்தாளப்பட்டுள்ளன. நம்மாழ்வார் தம்மை நாயகியாக - காதலியாகக் கற்பனை செய்து கொண்டு நாரை முதலான பறவைகளைத் திருமாலிடம் தூது அனுப்புவதாகப் பாடும் பாடல்கள் நயம் மிக்கவை. உயிரினங்கள் சிறிதும் துயரின்றி வாழ ஒரே வழி இறைவனைத் தொழுவதே என்பதை

***"தொழுமின் தூய மனத்தால் இறையும் நில்லா துயரங்களே"*** (நா.தி.பி,பா.2365.)

என்ற பாடல் வரிகளில் உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் இன்பம் என்பது பொதுவானது. அதனை அடைவதற்கு இறைவன் ஒருவனே பற்றுகோல். அவனை சரணாகதி அடைவதே துயரங்களை களைய ஒரே வழி என்பதை

***"சேர்மின் உயிர்க்கு அதன் நேர் நிறை இல்லே***
***அற்றது பற்றெனின் உற்றது வீடு "*** (நா.தி.பி,பா.2097.)

என்ற பாடல் வரிகளில் இறைவனை வழிபட வேண்டியதன் காரணத்தைக் கூறி மக்களை நல்வழிப்படுத்துவதைக் காண முடிகிறது. நம்மாழ்வார் தம் படைப்புகள் வழி பிற படைப்புகளுக்குப் பராங்குசனாக திகழ்கின்றார். பக்தியின் பொருட்டு பராங்குசன் என்ற புனைப்பெயர் நிச்சயம் பெருத்தமாக உள்ளது. படைப்புகளின் பொருட்டு பராங்குசன் என்ற பட்டம் சாலச்சிறந்ததே. அவருடைய நான்கு படைப்பு நூல்களுமே பிற படைப்புகளுக்கு அங்குசமாக திகழ்கின்றன. உயிர்களை நல்வழிப்படுத்த உரைக்கும் ஒவ்வெரு சித்தாந்தமும் வைணவ நெறிக்கு உட்பட்டதே ஆகும்.

நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் திருவாய் மொழி என்ற நூல் சிறப்பிடம் பெறுகின்றது. செந்தமிழ் வேதம் என்றும் வைணவ சித்தாந்தத்திற்குரிய பிராமண நூல் என்றும் குறிப்பிடுகின்றனர். இத்தகு சிறப்பு பொருந்திய நூலினை படைத்தளித்த நம்மாழ்வார் பக்தி இலக்கிய உலகின் பாராங்குசன் என்ற தன்மைக்குரியவரார். திருவாய்மொழி இசையோடு பாடுதற்கேற்ற பாட்டாக நம்மாழ்வார் படைத்துள்ளார். "பண்ணார் பாடல் இன் கவிகள் யானாய்த்தன்னைத் தான் பாடி" என்று நம்மாழ்வார் பல இடங்களில் குறிப்பிடுகிறார். திருவாய் மொழி பாடல்களுக்கு பண்ணும் தாளமும் வகுக்கப்பட்டிருந்தது. நம்மாழ்வார் இசை பற்றிய முழுமையான அறிவினை பெற்றவர் என்பது புலனாகின்றது. இறைவன் எல்லாப் பொருள்களும் ஆகி நிற்கின்றான் என்ற கருத்தினை

**"திடவிசும்பு எரிவளி நீர்நிலம் இவைமிசைப்**

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

**படர் பொருள் முழவதுமாய் அவை அவை தொறும்"** (திரு.வா,பா.1-1-7)

என்ற பாடல் வரிகளில் பஞ்சபூதமாக இறைவன் நிலைபெற்று விளங்குகின்றான் என்பதை விளக்குகிறார். ஆதிமனிதன் பஞ்சபூத வழிபாடு என்பது இயற்கை புரிதலின் ஒரு அம்சமாக தோற்றுவிக்கப்பட்டதை ஆய்வாளர்கள் நன்கு அறிவர். இயற்கையின் மாபெரும் சக்தியின் வெளிப்பாடு பஞ்சபூத வழிபாட்டு முறையாகும். திருமால் இவ்வுலகினைப் படைக்கும் போது அவற்றின் ஒவ்வொரு அம்சத்திலும் தன்னை முன்னிலைப்படுத்தியே படைத்தார். இறைவன் நிலமாகி நின்று, ஆகாயமாக பரந்து விரிந்து, தீ, காற்று, நீர் என்று அனைத்தின் ஆதாரமாக, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளாக விளக்குகிறான். பக்த பிரகல்நாதனிடம் அவன் தந்தை இரணியகசிபு எங்கு ஒளிந்திருக்கிறான் உன் ஹரி என்று வினவகிறார். பிரகல்நாதன் தூணிலும் துரும்பிலும் இறைவன் இருக்கின்றான் என பதிலுரைக்கும் விதமே இங்கு நினைவு கூறத்தக்கதாகும். மண்ணிலும் விண்ணிலம் மிக நுட்பமான மிகச்சிறிய இடம் தோறும் அந்தந்த இடங்களிலே விளங்கும் பொருள்கள் தோறும் மறைந்து வியாபித்து விளங்குபவன் இறைவன். இறைவனிடத்து அவருக்கு இருக்கும் வேட்கையை வெளிப்படுத்தும் பாடல்

**"கைகளால் ஆரத்தொழுது தொழுது உன்னை**
**வைகலும் மாத்திரைப்போதும் ஓர்வீடு இன்றி**
**பைகொள் பாம்பு ஏறி உறைபரனே உன்னை**
**மெய் கொள்ளக்காண விரும்பும் என் கண்கள்"** (திரு.வா,பா.3-8-4)

என்ற பாடல் வரிகளில் நன்றாக கைகள் குளிரும் படி வணங்கி வழிபடுதலை குறிப்பிடுகிறார். பசியர் வயிறு ஆர உண்ணதல் போன்று உன்னை வணங்கி வழிபட வேண்டும் என்று நுட்பமான பொருளினை முன்வைத்து பாடியுள்ளார். இறைவனை வணங்குவதற்காகவே கை, கால் முதலிய அவயவங்களோடு கூடின விசித்திரமான இந்த உடல் ஆதிகாலத்தில் உருவாக்கப்பட்டது. வாய்க்கு இறைவனை ஏத்துதல் போன்று கைக்குத் இறைவனை தொழுதலே முதன்மையானத் தொழில் என்பதை குறிப்பிடவே தொழுது தொழுது என்று அடுக்குத் தொடரைக் குறிப்பிடுகிறார். ஒரு நொடிப்பொழுதும் நீங்காமல் உன்னை உண்மையாகவே காணவேண்டும் என்று கண்கள் விரும்புவதாக குறிப்பிடுகிறார். பாம்பு படுக்கையில் வீற்றிருப்பவனே எங்கும் நிறைந்திருப்பவனே உன் திருவடிகளைப் பற்றி இரண்டறக் கலந்த நிலையை வேண்டுகிறார்.

கண்ணன் திருவடிகளை அடையும் மனமுடைவர்கள் சதாசர்வகாலமும் சிந்திக்கக்கூடிய திருப்பெயர் நாராயணன் என்ற நாமமே ஆகும். நாராயணன் என்ற நாமம் கண்ணன் திருவடிகளில் சென்று சேர்ந்துவிடும் என்பதை

**"கண்ணன் திருவடி எண்ணுக மனமே**
***திண்ணம் அழியா வண்ணந் தரும்"*** (பாரதி - 49)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

என்ற பாடல் வரிகளில் நம்மாழ்வார் குறிப்பிடுகிறார். மகாகவி சுப்ரமணிய பாரதியும் தனது தோத்திரப் பாடல்களில் கண்ணன் திருவடி பேற்றினைப் பாடியுள்ளார். அடியார்கள் காட்சிக்கு எளியவனானவனைப் பொருந்தியிருந்து தொழுவார்கட்குத் தீவினைகள் ஒருபோதும் நெருங்காது என்பதை

**"அமரர்க்க அரியானை**
**தமர்கட்கு எளியானை**
**அமரத் தொழுவார்கட்கு**
**அமரா வினைகளே" (**திரு.வா,பா.10-5-9)

என்ற பாடல் வரிகளில் தன் அடியார்களின் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து காத்தருள்பவனாக திருமால் விளங்குகின்றான் என நம்மாழ்வார் குறிப்பிடுகிறார். பாரதியார் கண்ணன் பாட்டில் கண்ணன் என் சேவகன் என்பதை

**"எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான்**
**மாடுகன்று மேய்த்திடுவேன் மக்களை நான் காத்திடுவேன்"** (பாரதி - 14)

என்ற கூற்றின் வழி காலங்கள் பல கடந்து நின்றாலும் திருமால் மீது கொண்ட பக்தி நிலை ஒருபோதும் மாற்றம் பெறாது என்பது தெளிவாகின்றது. நம்மாழ்வார் இறைவனை ஐந்து நிலைகளில் போற்றி வணங்கி வழிபாடு செய்கிறார். அவை

1. பரதத்துவம், 2.வியூகம், 3.விபவம், 4. அர்ச்சை, 5. அந்தர்யாமி

என்ற ஐந்து நிலைகளில் இறைவனை நிலைநிறுத்தி வழிபடுகிறார். பரதத்துவம் என்பது எல்லைகளைக் கடந்து எங்கோ உள்ள பரம பதத்தில் வீற்றிருப்பவன் இறைவன் என்று குறிப்பிடுகிறார். வியூகம் என்பது அவர் பாற்கடலில் பள்ளிகொண்டு இவ்வுலகினை காக்கின்ற தன்மையினைக் இயக்கும் போது காட்சி தருவதாகும். விபவம் என்பது இவ்வுலகில் மனிதனாக அவதாரம் எடுத்து காட்சியளிப்பது. அர்ச்சை என்பது கோவில்களில் சிலைகளின் உள் பொதிந்தும் வெளி வடிவமாய் காட்சி தருவதாகும். அந்தர்யாமி என்பது உலகில் உள்ள எல்லா உயிர்களின் உள் உறைந்து, உயிரை செயலாற்ற செய்யும் விந்தையாகும். இந்த ஐந்து நிலைகளிலும் உள்ள இறைவனை நம்மாழ்வார் தம் பாடல்களில் பாடியுள்ளார். திருமாலின் அதார சிறப்பு, அர்ச்சை சிறப்பு இரண்டின் தன்மைகளை திறம்பட பாடுவதோடு, அத்தன்மைக

**பெரிய திருவந்தாதி**

இது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நான்காவது ஆயிரத்தில் உள்ளது. இதில் மொத்தம்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

87 பாடல்கள் உள்ளன. எல்லாப் பாடல்களும் அந்தாதி அமைப்பைக் கொண்டவை ஆகும். இந்நூல் திருமாலின் சிறப்புகளைப் பலவாறு புகழ்ந்து கூறுகிறது. ஏனைய அந்தாதிகளைவிட இப்பிரபந்தத்தில் பல பாடல்கள் தம் நெஞ்சுக்கு உணர்த்துவனவாக பாடியுள்ளார். எவராயினும் இறைவன் புகழை நினைத்து தன் வினையைப் போக்கிக் கொள்ள வேண்டும். நம் துன்பம் தொலைய இறைவன் போக்கிக் கொள்ள வேண்டும். நம் துன்பம் தொலைய இறைவன் ஒருவனே வழி வேறு வழியில்லை

**“பெற்ற தாய் நீயே பிறப்பித்த தந்தை நீ**
**மற்றையார் ஆவாரும் நீ, பேசில் எற்றேயோ**
**மாயமா மாயவனை மாய, முலை வாய் வைத்த**
**நீ அம்மா, காட்டும் நெறி?”** (பெரி. திரு - 5)

என்ற பாடல் வரிகள் இறைவன் இந்த உலகில் அனைத்தும் மாக இருக்கிறான். தாயாக, தந்தையாக, நாம் பார்க்கும், பழகும், பேசும் அனைத்து நபர்களும் அவனே. எல்லா நிலைகளிலும் பெருமானை அடைய எழுந்த வேட்கையைப் புலப்படுத்துகிறது. அவனது புகழை இடைவிடாது நினைத்துக் கொண்டு வாழ்வதால் வரும் இன்பத்திற்கு இணையானது இவ்வுலகில் இல்லை என்று குறிப்பிடுகிறார்.

**திருவாசிரியம்**

நம்மாழ்வார் பாடிய திருவாசிரியம் ஏழு பாடல்களைக் கொண்டது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில், நான்காவது ஆயிரத்தில், 22வது பாடல் தொகுப்பாக இடம்பெற்றுள்ளது. நம்மாழ்வாரது இலட்சியம். ‘திருவேங்கடமலையில் உள்ள என் அப்பன் எம்பெருமான் புகழ் பாடுவது அல்லாமல் வேறு ஒருவரைப் புகழத் தனது கவிதைத் திறத்தைப் பயன்படுத்த மாட்டேன்’ என்பதாகும். உலகில் மனிதன் தன் இயல்புக்கு ஏற்ப வாழ்வதைவிட உலகியல் இயல்புக்கு ஏற்ப வாழ்வதே சிறந்தது. ஆன்ம சக்தி வீடுபேறு அடைவதற்கு உரிய செயலை உலகில் உள்ள உயிர்களில் மனிதன் மட்டுமே செய்ய முடியும் என்பதை உணரும் தருமமே உயர் நலமுடையவன் ஆகின்றான். நம்மாழ்வார் உயர்நலமுடையவனின் திருவடியை பற்றிக்கொள்ள சொல்லும் உபதேசம்

***“உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன்***
***மயர்வற மதிநலம் அருளினன் எவன் அவன்***
***அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன் அவன்***
***துயரறு சுடரடி தொழுதெழு என் மனனே”*** (நா.தி.பி,பா.2084.)

என்று நம்மாழ்வார் தன் மனத்திற்கு உபதேசம் செய்வது மனித குலத்திற்கு உபதேசம் செய்வதாக அமைகின்றது. தன்னைவிட உயர்வு உடையவர் நலமுடையவர் என எவரும் இல்லை என்ற

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

பெருமைக்கு உரியவர் யார்? அஞ்ஞானத்தை விலக்கி, தெளிந்த ஞானத்தை வழங்கியவர். எந்த நிலையிலும் குற்றமற்றவராகி நித்திய பிரகாசம் உடைய தேவர்களின் தலைவர். அத்தகைய சிறப்புமிக்க பரம்பொருளின் ஒளிமிக்க திருவடியைத் தொழுது இப்பிறவியாகிய துயரத்தை தீர்த்துக்கொள் என்று குறிப்பிடுகிறார். மனிதன் வீடு என்பதற்கு வைணவ சமயம் தனி உலகம் என பொருள்கொள்கிறது. வள்ளுவர் "யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் - வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" (குறள் - 346) என்ற குறளில் நான், என்னுடையது என்ற அகந்தையை அகற்றியவன், தேர்வகளை விட உயர்ந்த மேட்சத்தினை அடைவான் என குறிப்பிடுகிறார்.

வானம் என்பது வீட்டுலகம். வானோர்க்கு உயர்ந்த உலகம் தேவர்களும் அடைய இயலாத வீட்டுலகம். தத்துவ ஞானம் பெற்றவர் அடையும் வீடு பேறு என்பதை திருவாய்மொழி குறிப்பிடுகிறது.

**"புலன் ஐந்துமே உம் பொறி ஐந்தும் நீங்கி**
**நலம் அந்தம் இல்லாதோர் நாடு புகுவீர்**
**அலமந்து விய அசுரரை செற்றான்**
**பலமுந்து சீரின் படிமின் ஓவாதே "** (நா.தி.பி,பா.2974.)

என்னும் பாடலில் நலம் அந்தம் இல்லாதோர் வீடு என்ற ஒப்பற்ற அழிவில்லாத நாட்டினை அடைய முடியாது என்று குறிப்பிடுகிறார். உயிரற்ற பொருள் எல்லாவற்றிற்கும் மூலப்பகுதி காரணமாகும். பொருள் தோற்றத்திற்கு மூன்று காரணங்கள் உண்டு. மண் குடம் உண்டாக மண் வேண்டும் 1. காரணம் 2 அக்குடத்தை செய்பவன். மூன்று அக்கூடம் செய்வதற்குரிய சக்கரம். அதுபோல இவ்வுலகத் தோற்றத்திற்கு இறைவன் மூன்று காரணங்களாக உள்ளான் என்பது வைணவ சமய கொள்கையாகும்.

**"நினைந்த எல்லா பொருள்களுக்கும் வித்தாய்**
**முதலில் சிதையாமே**
**மனஞ்செய் ஞானத்து உன் பெருமை மாசுணாதோ**
**மாயனே! "** (நா.தி.பி,பா.2993.)

என்றும்

**"தானோர் உருவே தனிவித்தாய் தன்னின் மூவர் முதலாய**
**வானோர் பலரும் முனிவரும் மற்றும் மற்றும் முற்றுமாய்"** (நா.தி.பி,பா.2946)

என்றும்

**"எப்பொருட்கும் வேர் முதலாய் வித்தாய் பறந்து தனி நின்ற**
**கார்முகில் போல் வண்ணன்"** (நா.தி.பி,பா.2950)

,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

ஆகிய பாடல் வரிகள் உலகின் தோற்றத்திற்கு முதற்காரணம் இறைவன் என்பதையும் சித்து அசித்துக்களை வெளிப்படுத்தி உலகை தோற்றுவித்தல் நிமித்த காரணம் என்பதையும் தெளிவுபட குறிப்பிடுகிறார். இறைவனை இடையறாது நினைத்து அடையும் உயர்ந்த பேற்றினை நம்மாழ்வார் சொல்லோவியமாக

**“உலகு படைத்து உண்ட எந்தை அறை கழல்**
**சுடர்ப்பூந் தாமரை சூடுதற் அவாவு**
**ஆருயிர் உருகி உக்க நேரிய**
**காதலன்பின் இன்பு ஈன் தேறல்**
**அமுத வெள்ளத்தான் ஆம் சிறப்பு”** (நா.தி.பி,பா.2578)

என்ற பாடல் வரிகளில் எந்தையாகிய எம் பரம்பொருள் இந்த உலகத்தை படைத்து, அதை உண்டவன். அவனது திருவடிகளை நாம் பற்றுகோடாக கொண்டு பிறவிப் பெருங்கடலைக் கடக்க வேண்டும். பரபிரமத்தின் திருவடியை அடைய அவன் மீது கொண்ட ஒப்பற்ற அன்பு, அந்த அளவற்ற அன்பின் வெளிப்பாடு இறைவனது திருவடி அருள் என்று குறிப்பிடுகிறார்.

**திருவிருத்தம்**

நூறு பாக்களைக் கொண்டது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில், நான்காவது ஆயிரத்தில் 19வது தொகை நூலாக அமைந்துள்ளது. நம்மாழ்வாரது காலத்தில் வறுமையில் உழலும் புலவர்கள் செல்வரைப் பாடிப் பரிசில் பெறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். செல்வரைப் பொய்யாகப் பொருளுக்காகப் புகழ்ந்து பாடும் பொய்ம்மையை நம்மாழ்வார் வெறுத்தார். ஒரு பதிகம் முழுவதும் அவ்வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளார். பாடல் பாடுவதன் நோக்கம் திருமாலைப் பாடுவதே. திருமாலை வழிபட்டால் சிறப்புப் பெறலாம் என்று அறிவுறுத்துகிறார்.

மதுரகவியாழ்வார் பாடியது **கண்ணிநுண் சிறுத் தாம்பு**. இந்நூலில் 11 பாடல்கள் உள்ளன. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் முதலாவது ஆயிரத்தில், ‘கண்ணிநுண் சிறுத்தாம்பு’ பத்தாவது நூல் தொகுப்பாக உள்ளது. இப்பாடல்களில் மதுரகவியாழ்வார் திருமாலை புகழ்ந்து பாடாமல், தமது ஆசாரியரான **நம்மாழ்வாரையே** தெய்வமாகக் கருதி அவரைப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். மதுரகவி ஆழ்வார் பாண்டி நாட்டில் திருக்கோளூரில் பிறந்தவர். காதுக்கும் மனத்துக்கும் இனிய பாடல்களைப் பாடியவர் என்பதால், மதுரகவி ஆழ்வார் என்றழைக்கப்படுகிறார். இவரது பதினொரு பாடல்களும் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. அந்தணர் மரபினர் மதுரகவி ஆழ்வார். இவர் வேளாள குலத்தவராகிய நம்மாழ்வாரைப் புகழ்ந்து வழிபட்டு உயர்ந்தது, ‘இறைவனை அடைய எதுவும் தடை இல்லை’ என்பதை

***“கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்***
***பண்ணிய பெருமாயன், என்னப்பனில்***
***நண்ணித் தென்குருகூர் நம்பி யென்றக்கால்***

,| Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

***அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே"*** (நா.தி.பி,பா.937)

என்ற பாடல் வரிகள் வழி புலப்படுத்துகிறார். **கண்ணிநுண் சிறுத்தாம்பு** என்பது கண்ணை விட மென்மையான சிறு கயிறு கொண்டு **கட்டியவன் யார்? என்றால் தென்குருகூர் நம்பி அவர் என்றால் என் நா** இன்னிக்கும் அமுதம் ஊற பாடல் இயற்றும் வல்லமையை பெறுகின்றதே என்பதை

***"நாவினால் நவிற் றின்பம் எய்தினேன்***
***மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே***
***தேவுமற் றறியேன் குருகூர்நம்பி***
***பாவி னின்னிசை பாடித் திரிவனே" (***நா.தி.பி,பா. *943)*

என்ற பாடல் வரிகளில் நாவினால் நம்பி புகழ்பாடுகையில் மேவின இன்பம் அடைவதாக குறிப்பிடுகிறார். மதுரகவி ஆழ்வார் பாடிய பாசுரங்கள் அவரது பக்தியைப் புலப்படுத்தும். நம்மாழ்வார் உலகக்கட்டிலிருந்து விடுபட வேண்டுகிறார். அகத்துறை அமையப்பாடிய நூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் இப்பிரபந்தத்தில் அமைந்துள்ளன. இதனை ஓர் அகத்துறை இலக்கியம் என்று ஒதுக்கிவிட முடியாது. முதற் பாட்டில் ஆழ்வார் இறைவனிடத்து வேண்டுவதாக

**"பொய்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும்**
**இந்நின்ற நீர்மை இனியான் உறாமை உயிர் அளப்பான்"** *(*நா.தி.பி,பா. *2477)*

என்ற பாடல் வரிகளில் பொய் நிறைந்த அறிவு என்பது உலகியல் அறிவினை நன்கு பெற்றவன். கூட ஒழுக்கம், அசுத்தமான உடல் ஆகிய இயல்புகளை பெற்று இனி நான் அடையாமல், உயிர்களைக் காக்கும் இறைவா! என்னை பொய்மை நிறைந்த வாழ்விலிருந்து காக்க வேண்டும் என்று பாடுகிறார். பிறவி வோண்டாம் என அகத்துறை இலக்கிய மரபில், அகத்திணை மொழியில் அமையப்பட்ட பாடல்

**"வாரா யினமுலை யாளிவள் வானோர் தலை மகனாம்**
**சீராயின தெய்வ நன்னோ யிது தெய்வத் தண்ணந்துழாய்த்**
**தாராயினும் தழையாயினும் தன்கொம்பதாயினும் கீழ்**
**வேராயினும் நின்ற மண்ணாயினும் கொண்டு வீசுமினே"** *(*நா.தி.பி,பா. *2478)*

என்ற பாடல் வரிகளில் வானோர் தலைவனான திருமால் மீது காதல் கொண்ட பராங்குச நாயகியின் நிலையை வர்ணித்து விளக்குவதாக அமைகின்றது. அவன் மீது கொண்ட பெருங்காதல் நோய் பிடித்த தலைவியின் இந்நிலைக்கு மருந்து திருமாலின் திருமார்பில் அலங்காரம் செய்த திருத்துழாய் மாலையே தக்க மருந்து என்பதை சுவைபட பாடியுள்ளார்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

**முடிவுரை**

நம்மாழ்வார் பக்தி இலக்கியம் போற்றும் பராங்குசன் என்பதன் பொருண்மை. பிற்காலத்தில் பக்தி இலக்கிய படைப்புலகத்தால் பராங்குசன் என்ற சொல் போற்றப்பட்டது. ராமானுசரின் சீடர்களுள் ஒருவரான கூரத்தாழ்வான் பாடிய பஞ்சஸ்தலம் எனும் நூலில் நம்மாழ்வாரை குறிக்கும் பராங்குசன் என்னும் பெயர் இடம்பெற்றுள்ளது. நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் உள்ள வடமொழி தனியனிலும் ஶ்ரீமத் பராங்குச முநிம் என்ற தொடர் காணப்படுகிறது. மதுரகவி ஆழ்வாரின் வைபவத்தில் நம்மாழ்வாரை குறிக்கும் பராங்குசர் என்ற பெயர் காணப்படுகிறது. அழகிய மணவாள பெருமாள் நாயனார் இயற்றிய ஆசாரிய கிருதயம் என்ற நூலில் பராங்குசன் என்ற குறிப்பு காணப்படுகிறது. திருவாய்மொழி நூற்றந்தாதியின் ஓரிடத்தில் பரங்குசன் தன் சொற்றேனில் நெஞ்சே என்று பாடியிருக்கிறார். இவ்வாறு நம்மாழ்வார் வாழ்ந்த காலம் அல்லாது பிற்கால பக்தி இலக்கிய படைப்பாளர்களிடையே பராங்குசன் என்ற பெயர் போற்றுதற்குரிய பெயராக மாறிற்று. அவரின் பாடல் வரிகள் மூலம் அழிவில்லாத தன்மையை இறைவன் பெறுகின்றான். மக்கள் அவரின் பாடல்களை பாராயணம் செய்வது மூலம் இறைப்பேற்றினை உணர்கின்றனர் என்பதே மெய்மையாக வெளிப்படுகின்றது. பராங்குசன் என்ற பாண்டிய மன்னர் ஒருவர் இருந்தார். அவர் பல்வேறு போர்களை நிகழ்த்தி பல வெற்றிகளைப் பெற்றவர். பிற அரசர்களுக்கு அங்குசமாக திகழ்ந்தவர் என்று குறிப்பிடுகின்றனர். பராங்குசன் என்ற சொல் பார் முழுவதிலும் அக்காலக்கட்டத்தில் வெல்லமுடியாத திறன் பெற்றவன் என்பதே பொருள் படுகின்றது. அது அவரவர் தேர்வு செய்து இயங்கும் துறைகளைச் சார்ந்தாக அமைந்துள்ளது. நம்மாழ்வார் வேதங்களின் புரியாத புதிர்களுக்கு அங்குசமாக நான்கு நூல்களை இயற்றி அளித்துள்ளார் என்பதும் கட்டுரை வழி புலப்படுகிறது.

**துணைநூற் பட்டியல்**

[1]. அருணாசலம், மு, தமிழ் இலக்கிய வரலாறு, ஒன்பதாம் நூற்றாண்டு, பாகம் – 2, தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம், சென்னை, 2005.

[2]. நம்மாழ்வார், திருவாய்மொழி, சாராதா பதிப்பகம், சென்னை, 2012.

[3]. ஆழ்வார்கள், நாலாயிர திவ்ய பிரபந்தம், தங்கத்தாமரைப் பதிப்பகம், சென்னை, 2016.

[4]. விமலானந்தம், மது,ச.பேராசிரியர், தமிழ் இலக்கிய வரலாறு, அபிராமி பதிப்பகம், சென்னை, 2022.

[5]. வெங்கடேசன்,ந.முனைவர், வைணவ இலக்கியம் (ஆய்வுக்கோவை) அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம், 2013.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

Web resources

1. https://ta.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AE%95%E0%AF%8D%E0%AE%A4%E0%AE%BF_%E0%AE%87%E0%AE%B2%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AE%E0%AF%8D
2. https://www.dinamani.com/weekly-supplements/tamilmani/2022/Jul/31/%E0%AE%AA%E0%AE%B0%E0%AE%95%E0%AE%BE%E0%AE%B2%E0%AE%A9%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%AA%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%9A%E0%AE%A9%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D-3890165.html
3. https://drdayalan.wordpress.com/tag/%E0%AE%AA%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%9A%E0%AE%A9%E0%AF%8D/
4. https://pranavjournals.com/finearts/wp-content/uploads/46-%E0%AE%AA%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%9A-%E0%AE%A8%E0%AE%BE%E0%AE%AF%E0%AE%95%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BF%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%A4%E0%AF%82%E0%AE%A4%E0%AF%81.pdf
5. https://ta.wikipedia.org/wiki/%E0%AE%AA%E0%AE%B0%E0%AE%BE%E0%AE%99%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%9A%E0%AE%A9%E0%AF%8D

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work

Tamilmanam